பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 10 திங்கட்கிழமை (23.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 147

## தமிழ் எம்.பிக்கள் மட்டக்களப்புக்கு செல்ல பாதுகாப்பு உத்தரவாதம் கோருகின்றனர்

### ஹெலிக்கொப்டர் வசதி தருமாறு கேட்டு அரசுக்குக் கடிதம்

கொழும்பு,ஏப்ரல் 23

மட்டக்களப்பில் நாளை நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு செல்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குமாறு தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள் அரசிடம் கோரியுள்ளனர்.

தற்போது கொழும்பில் தங்கி இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்கள் அங்கு செல்வதற்கு ஹெலிக்கொப்டர் வசதி செய்து தருமாறும் கேட்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பில் தாங்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்புப் பிரச்சினையை விளக்கி, கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அக்கடிதத்திலேயே இக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்வதற்கு வசதியாக ஹெலிக்கொப்டர் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கூட்டம் இம்மாதம் 11ஆம் திகதி கொழும்பில் நாடாளுமன்றக்குழு அறையில் இடம்பெறவிருந்தது. பின்பு சில காரணங்களுக்காக அக்கூட்டம் ஒத்திப்போடப்பட்டது.

அக்கூட்டத்தை நாளை மட்டக்களப்பில் நடத்துவதென அரசு இப்போது தீர்மானித்திருக்கின்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.அரிய நேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ் வரி மற்றும் கனகசபை ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நால்வரும் தற்போது கொழும் பில் தங்கியுள்ளனர்.இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு ஏற்றவாறு தமது பாதுகாப்பு உறுதிசெய்யப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு மட்டக் களப்பு செல்ல ஹெலிக்கொப்டர்வசதி (03ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த சில தினங்களுக்குள் வடக்கில் பெரும் தாக்குதல்!

### பிரதமர் ரட்ணசிறி சொல்கிறார்

கொழும்பு,ஏப். 23

வடக்கில் எதிர்வரும் சில தினங்களில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது பெரும் தாக்குதல் ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று ஹொறனையில் நடைபெற்ற புதுவருட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''கிழக்கில் எஞ்சியுள்ள புலிகளின் முகாம்கள் மீது அரச படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த வருடம் பயங்கரவாதத்தை ஒழிப்பது மாத்திரம் அல்ல பாரிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வருடம்'' - என்றும் அங்கு ரட்ணசிறி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத்துக்கு எதிராக அரசு முறையான யுத்தம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் மூலமாக வடக்கில் இரு பிரதேசங்களுக்கு மாத்திரம் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களைப் பயமுறுத்தவதன் மூலமாக தனியாட்சி ஒன்றை உருவாக்கும் புலிகளின் முயற்சி அழிக்கப்பட்டுவிட்டது.

படையினரின் இராணுவ (03ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் விருப்பத்தை ஏற்றாவது அரசு பேச்சுக்குத் திரும்பவேண்டும்

### புலிகளும் தாமதிக்காமல் முன்வரவேண்டும் என்கிறது ஐ.தே. கட்சி

கொழும்பு,ஏப்.23

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குப் பேச்சுமூலமே தீர்வுகாண வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம்கூறியிருக்கிறார். இனிமேலாவது சாக்குப் போக்கு எதனையும் கூறாமல் அமைதிப் பேச்சைத் தொடங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளவேண்டும். புலிகளும் வன்முறை நடவடிக்கைகளை கைவிட்டுப் பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் புலிகளுக்கும் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கூறியதாவது:-

நாட்டில் யுத்தமும் மனித உரிமை மீறல்களும் அதிகரித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போப்பாண்டவரைப் போய்ச் சந்தித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்குப் பேச்சு மூலமே தீர்வு காணுங்கள் என்று போப்பாண்டவர் மஹிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதேபோல் மனித உரிமை மீறலையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இந்த இரண்டு விடயங்களும் நாட்டைச் சீரழித்து வருகின்றன என்பதை போப்பாண்டவர் நன்கு அறிவார். அதேபோல் நாமும் இவற்றை நன்கு உணர்ந்து வைத்துள்ளோம். அதனாலேயே இந்த விடயங்களை இல்லாதொழிக்க அரசு உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனநாம்அடிக்கடி

(03ஆம் பக்கம் பார்க்க)

**அன்பார்ந்த வாசகர் பெருமக்களே!**

**எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் உங்களது உதயனின் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நேர்ந்தது. அவ்வேளையில் எமக்கு ஒத்துழைப்பு நல்கிய வாசகர்கள், விளம்பரதார்கள் மற்றும் எல்லோருக்கும் நன்றிகள்.**

**கடந்த சில மாதங்களாக உங்களுக்கிருந்த தவிப்பை - குறையை - தீர்க்கும் பொருட்டு, இன்னும் இரு தினங்களில் உதயன் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கையை முந்திய அளவுக்கு அதிகரிக்க உள்ளோம்.**

**இடைப்பட்ட காலத்தில் சில வேளைகளில் விளம்பரங்களை ஏற்கமுடியாத நிலைமையும் உண்டானது. அது குறித்து வருந்துகிறோம். மீண்டும் உங்களுக்குத் திருப்தி தரும் வகையில் செய்திகள், விளம்பரங்களைப் பிரசுரிக்க வசதி செய்வோம்.**

**அருகில் உள்ள எமது விற்பனை முகவர்களுடன் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுங்கள். உதயன் பிரதி தவறாது கிடைப்பதை நிச்சயப்படுத்துங்கள்.**

**- நிர்வாகத்தினர்.**

## இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட இரண்டு தரப்புகளும் தயாராகின்றன

கொழும்பு,ஏப்.23

எதிர்வரும் வாரங்களில் அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம் என்று பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான ஊகங்கள் ஒரு புறம் நிலவிய போதிலும் இரண்டு தரப்புகளும் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்கு முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. மோதல்களுக்காகத் தம்மை தயார் செய்து வருகின்றன.

குறிப்பாக வடபோர்முனையில் இரு தரப்புகளும் தமது தயார்படுத்தல்களைத் தீவிரமாக்கிவருகின்றன.

முல்லைத்தீவுக் கடற்பகுதிகளிலும் வட - கிழக்குக் கரையோரப் பகுதிகளில் குறிப்பாக நாகர்கோயில், வெற்றிலைக்கேணி, கண்டற்காடு, சாளை ஆகிய கடற்பகுதிகளிலும் கடற்புலிகள் தமது பலத்தை அதிகரித்து வருகின்றனர்.

அதேபோன்று அரசின் முப்படைகளும் வடக்கின் போர் முனைகளில் தம்மைப் பலப்படுத்தியும் தயார்படுத்தியும் வருகின்றன என்று இராணுவ ஆய்வாளர் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் படை அணிகளில் பல இப்போது வடக்கே

(03ஆம் பக்கம் பார்க்க)

## தரை மீது தாக்குதல் நடத்தும் பயிற்சியில் விடுதலைப் புலிகளின் விமானங்கள்

கொழும்பு,ஏப்.23

விடுதலைப் புலிகளின் விமானங்கள், தரையில் உள்ள இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளர். ஆனால் அதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த பாதுகாப்புக் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

அக்கட்டுரையில் உள்ள குறிப்பிடக்கூடிய முக்கியதகவல்களில் சில வருமாறு:-

★ அரசாங்கம் கூறுவதுபோல் கிழக்கு படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் இல்லை. சில பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகள் மிக அதிகளவான சேதங்களை விளைவித்து வருகின்றனர்.

- பல இடங்களில் தற்போதும் எதிர்ப்புக்கள் உள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இது அதிகமாக உள்ளது. களத்தில் உண்மையான நிலைவரம் அரசாங்கத்தின் தீவிரமான பிரசாரங்களினால் மறைக்கப்படுகின்றன.

- விடுதலைப் புலிகளின் நோக்கம் தெளிவானவை. அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றைய இடத்திற்கு தமது படைகளை செறிவாக்கி வருகின்றனர். இது அரசாங்கப் படையினரின் பலத்தைப் பரவலடைய வைப்பதற்கு அவர்களுக்குப் போதுமானதாக உள்ளது.

★ மோதல்களில் காயப்படும் தமது உறுப்பினர்களின்தேவைக்காக விடுதலைப் புலிகள் குருதி சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பு முன்னரங்குகளுக்கு அண்மையாக பல இடங்களில் உயர் அலை வரிசை கொண்ட தொடர்பு சாதனங்களையும் நிறுவி வருகின்றனர்.

**திருமலைத் துறைமுகத்தில் தாக்குதல் முயற்சி**

★ திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்துநின்ற சரக்குக் கப்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் தகர்க்க முயன்றுள்ளனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## செம்பியன்பற்றில் வெடித்த ஷெல்கள்

கிளிநொச்சி,ஏப்.23

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் நேற்றுக்காலை ஏழு மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களால் இரு பெண்கள் காயமடைந்தனர்.

படையினர் ஏவிய ஷெல்கள் வீடு ஒன்றில் வீழ்ந்து வெடித்ததிலேயே அங்கிருந்த இருவர் காயமடைந்தனர். வேலுப்பிள்ளை செல்லம்மா(வயது 67), உதயகுமார் நிலக்சனா(வயது 8) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

அவர்கள் இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-1)

## சுண்டிக்குளம் கடலில் நேற்று மீன்பிடிப் படகு எரிந்து நாசம்

### கடற்படையினர் தாக்கியதாக முறைப்பாடு

உடுப்பிட்டி,ஏப்.23

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடலில் நேற்று அதிகாலை மீனவர் படகு ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியது.

அதில் சென்ற மீனவர்களில் ஒருவரான இராசரத்தினம் வசந்தன் (வயது 31) என்பவரைக் காணவில்லை என்று கூறப்பட்டது. இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். அவருடன் உதவிக்குச் சென்ற தங்கராசா சதீஸ்(வயது 25) சக மீனவர்களால் மீட்கப்பட்டுக் கரைக்குக் கொண்டு வரப்பட்டார்.

படகு மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் படகில் இருந்த ஒருவரைக் காணவில்லை என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

காணாமற்போனவரைத் தேடும் பணியில் பிரதேச மீனவர்கள் நேற்று மாலை வரை ஈடுபட்டிருந்தனர். (அ-1-155)

## விமானங்கள், ஹெலிகள் நள்ளிரவு, அதிகாலைத் தாக்குதல்கள் நடத்தின

கிளிநொச்சி,ஏப்.23

முல்லைத்தீவு நான்காம் கட்டை கடற்கரைப் பகுதியில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் மிக் 27 ரக விமானங்கள் றொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத்தாக்குதல்களால் மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர். தொழிலுக்குச் செல்வதற்குத் தயாரான மீனவர்களும் தமது மீன்பிடி உபகரணங்களை கரையில் விட்டுப் பாதுகாப்புத் தேடி ஓட நேர்ந்தது.

அதேவேளை -

மன்னார் பரப்புக் கண்டல் பகுதியில் சனிக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தியதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை (2006) முடிவுகளின்படி அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

1. செல்வன் பா.நிதுஜன் - 10A
2. செல்வன் சி.பிரணவன் - 9A, B
3. செல்வன் இ.முரளிதரன் - 9A, B
4. செல்வி க.ரதினி - 8A, 2B
5. செல்வி வி.கிருஜா - 8A, B, C
6. செல்வி மு.மோகனா - 8A, B, S
7. செல்வி செ.ஜீவனா - 8A, 2C

(59771)

இவர்களோடு 5A யும் அதற்கு மேலும் அதியுயர் சித்திபெற்று பாடசாலையினால் வழங்கப்படும் மாதாந்தம் 1500/= புலமைப்பரிசில் திட்டத்திற்கு தகுதிபெற்ற அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

*பாடசாலைக் கல்விச்சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம்.*

குறிப்பு:
க.பொ.த. உயர்தரம் 2009இற்கு கணிதம், விஞ்ஞானம், கலை,வர்த்தகப் பிரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணபப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். முடிவுதிகதி : 30.04.2007

- அதிபர்.

## Science Center
நெல்லியடி, கரவெட்டி.

A/L 2009 2008 2007

முன்னணி ஆசிரியர் சேவையில்
கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
*24.04.2007*
*பி.ப.4 மணி*

(சி/50065)

## தேவை

எமது நிறுவனத்துக்கு தையல் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

றொசானி காமன்ஸ்,
263/1, இராஜகாரியார் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

கனகசபை,
றொசானிகாமன்ஸ்,
புற்றுநோயாளர் ஆஸ்பத்திரி அருகில்,
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (59817)

## தேவை

எமது நிறுவனத்திற்கு ஆய்வுகூடப் பணியாளர், காசாளர், எழுதுவினைஞர், கிராபிக்ஸ் டிசைனர் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு: **கொனிக்கா கலர் லாப்**

தொ.பே.: 021 222 8333 (சி/50062)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

875 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

**07 11 44 50**

மகரம்

**20-04-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5852484 - 5863538

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 243,448 | 10/- | 2,434,480/- |
| 2 இலக்கங்கள் | 22,323 | 20/- | 446,460/- |
| 1 இல. + லக்கினம் | 21,991 | 30/- | 659,730/- |
| 2 இல. + லக்கினம் | 2,098 | 100/- | 209,800/- |
| 3 இலக்கங்கள் | 586 | 500/- | 293,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 5,000/- | 275,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | |
| மொத்தம் | | | 4,618,470/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 290,509 | | 5,641,970/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,543,450/-

[illegible]

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 5860536-5-75 |
| குருநாகல் | 5853469-0-02 |
| இரத்தினபுரி | 5855390-2-20 |
| மொனராகலை | 5855585-9-33 |
| அனுராதபுரம் | 5859703-2-63 |

## நான்காவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



தவப்பேறு
21.12.1918

சிவப்பேறு
08.05.2003

திதி: 23.04.2007

கோப்பாய் - இணுவில்
அமரர் கந்தையா ஆறுமுகம் (ஆசிரியர்)
(இலுப்பையடிப் பிள்ளையார் அடியவர்)

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே அப்பா ! இறைஞ்சுகிறோம்.

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(மனைவி - இளைப்பாறிய ஆசிரியை),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28,கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (59289)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம்மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

## தேவை

பகல், இரவுக் காவலாளிகள் தேவை

தாயகம் சிறுவர் இல்லம்
கோண்டாவில்.

தொடர்பு:
கொனிக்கா கலர் லாப்

(சி/50061)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
06.06.1949

மறைவு
08.05.2003

திருமதி
ஸ்ரீபாலகிருஸ்ணன் சந்திரபாலதேவி (சாந்தி)

திதி: சப்தமி 23.04.2007

எம்குடும்ப குல விளக்கே சாந்தி
நாம் வாழ சூரியனாய் நின்று ஒளி தந்தாய் அம்மா சாந்தி
தாமரைபோல நம்வாழ்வு மலர்ந்ததம்மா சாந்தி
எமக்குத் தென்றலாய் நீ இருக்க சாந்தி
புயலாக வந்தானம்மா காலனவன்
எம்மிடமிருந்து உன்னைப் பறித்து நான்கு ஆண்டுகள் ஆனதம்மா சாந்தி
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உன் பாசத்தின் நினைவு
எம் இதயத்தை விட்டு அகலாது அம்மா சாந்தி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(59835)

573, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(கணவர், பிள்ளைகள்)

## விற்பனைக்கு

எல்.ஜி.(LG), சிங்கர் (RNF) (புதிய நிலையிலுள்ள) நியூ மொடல் பிறிஜ்ஜுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**அம்பாள் மில்**
மல்லாகம் சந்தி,
சங்கானை.
தொ.பே.077 6668918

## A/L 2009

கலைப்பிரிவு
ஆரம்பம்:
01.05.2007
பிற்பகல் 3மணி
எமது முன்னணி ஆசிரியர்கள்
தமிழ்
நாக.தமிழிந்திரன்
இந்துநாகரிகம்
S.சுரேஸ்
புவியியல்
N.பாபு
அளவையியல்
S.பவன்
பொருளியல்
P.பிரதாப்
அரசியல்
A.K.றொபின்சன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தனிப்பாடத்திற்கான
அனுமதிகளும் வழங்கப்படும்.
**MATHURAM INSTITUTE**
பருத்தித்துறைவீதி, கட்டப்பிராய்.

## மரணஅறிவித்தல்

### *சின்னத்தம்பி இராசரத்தினம்*

(கார் உரிமையாளர் EN 7772)



கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் 21.04.2007 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

இவர் சின்னத்தம்பி - கைராசி தம்பதியினரின் அன்பு மகனும் தாவடியைச் சேர்ந்த கந்தையா - கனகம்மா தம்பதியரின் மருமகனும் மனோண்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், பொன்னம்மா, நடராசா, அன்னம்மா, தர்மலிங்கம் கனகம்மா மற்றும் இராசரத்தினம், அழகம்மா, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம், பரமானந்தம், இராஜலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் மங்கையர்க்கரசி(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), நவநீதன் (UK), தேவமனோகரன்(UK), தவரஞ்சினி, சசிகுமார் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேசசபை, செட்டிக்குளம்), மோகனதாஸ்(தொழில் நுட்ப அலுவலர், மன்னார்), முரளிதரன் கோமதி, கோகுலன் ஆகியோரின் தந்தையும் வராதராஜா (யா/சரவணை நாகேஸ்வரி ம.வி), கலைச்செல்வி(UK), பகிரதி(UK), செல்வகாந்தன்(பணியாளர், சுன்னாகம் ப.நோ.கூ.ச)ஆகியோரின் மாமனும் அவனிதா, சிவாகர், துவாரகன்(UK), ஆரணி(UK), ரசிகா, துஸ்யந்த், சரணிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2007) திங்கட்கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (59845)

*தகவல்:*
இ.நவநீதன் (*மகன்* UK).

## கலாலயா
*பயிற்சியகம்*
*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.
- **இருவார கால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, **Skirts, Blouses,** கவுண், **Nighty & Overcoat** தைத்தல் (இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான **6 மாத கால** தையல் வகுப்புகள்

*சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 29-04-2007*
*[illegible] நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 30-04-2007*

*[illegible]மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

பதிவாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## சரியும் செல்வாக்கைச் சரிக்கட்ட தமிழர் விரோதப் போக்கு கட்டவிழும்

இலங்கை அமைதி முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேயின் கொழும்புக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், இன்று கிளிநொச்சி செல்கின்றார். விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் அங்கு சந்தித்துப் பேசுகின்றார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வெள்ளியன்று வத்திக்கானில் சந்தித்த பரிசுத்த திருத்தந்தை பதினாறாவது ஆசீர்வாதப்பர், இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தி, அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டுங்கள் என்று அவரிடம் வற்புறுத்தியிருக்கின்றார்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், இந்தியா உட்பட சர்வதேச சமூகமே அமைதி முயற்சிகளில் முழு உறுதியோடு ஈடுபடும்படி அரசுத் தரப்பையும் விடுதலைப் புலிகளையும் நச்சரித்து வருகின்றன.

அமைதிப் பேச்சு மூலமான அரசியல் தீர்விலேயே அரசின் முழு நாட்டமும் உள்ளது என்று வாயளவிலேனும் - பேச்சுக்கேனும் - உறுதியளித்து வருகின்றார் அரசுத் தலைவர் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ.

தவிரவும், நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு தயார் என்றும், அதேபோல பேச்சு மேசைக்குத் திரும்பப் புலிகளும் தயாராகவே உள்ளனர் என்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்திகள் கசியவிடப்பட்ட வண்ணமிருக்கின்றன.

இவற்றை நோக்கும் சாதாரண பொதுமகனுக்கு, அமைதிப் பேச்சுகள் மீள ஆரம்பிக்க வாய்ப்புண்டு என்ற நப்பாசை மனதில் தோன்றுவது தவிர்க்க முடியாதது. ஆனால் அப்படி நடப்பது துர்லபம் என்பது தான் உண்மை.

பேச்சுக்கான வாய்ப்புகள் தகர்ந்துபோய், இரு தரப்புகளுமே மீண்டும் ஒரு மேசையில் சந்திக்க முடியாத அளவுக்கு முரண்பாடுகள் முற்றி, விரிசல் பெருத்து வருகின்றது.

அடுத்துவரும் வாரங்களும் மாதங்களும் இன்னும் உக்கிரமான - மோசமான - நிலை மையை உருவாகும் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதற்குக் கட்டியம் கூறும் அம்சமாக சில தகவல்கள் இப்போது வெளியாகியிருக்கின்றன.

அண்மையில் அரசுத் தலைமை எடுத்த முக்கிய கருத்துக் கணிப்பும் அதன் முடிவுகள் குறித்தும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அதிர்ச்சி அடைந்திருப்பது பற்றிய செய்திகளே அவையாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை, இலங்கையில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் எப்பாடுபட்டேனும் - எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்தியேனும் - தனது செல்வாக்கையும், தனக்கான ஆதரவையும் பேணிக்கொள்வது தான் அவரது பிரதான இலக்கு; முக்கிய நோக்கம். அதற்காக அவர் தேவைப்பட்டால் எந்த அணியுடனும் கூட்டுச் சேருவார். யாருடனும் - எந்த அடிப்படையிலும் - ஒப்பந்தம் செய்வார். எந்தக் கொள்கைக் கோட்பாட்டையும் பின்பற்றுவார். எந்தக் கொள்கைக் கோட்பாட்டையும் கோட்டைவிடுவார். இது நிதர்சனமாக இலங்கை மக்களுக்குத் தெரிந்த விடயம்தான்.

பேரினவாத மேலாண்மைச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்கள மக்களின் ஆதரவையும், செல்வாக்கையும் தமது பிடியில் வைத்திருப்பதற்காகத்தான் - அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் - தமிழர் தரப்பை இராணுவத் தீவிரப் போக்கோடு - போரியல் வெறித்தனத்தோடு - அவர் அணுகுகின்றார் என்பதும் வெள்ளிடைமலை.

ஆறு மாதத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின் பிரகாரம், அப்போது பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டிருக்குமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து 106 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்றிருக்கும் என்பது புலனாகியது.

ஆனால் தற்போதைய கருத்துக் கணிப்பின் படி, அத்தகைய தேர்தல் ஒன்று முற்கூட்டியே நடத்தப்படுவதை மக்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள். அப்படித் தேர்தல் நடத்தப்பட்டால் 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தற்போதைய ஆளும் ஸ்ரீல. சு. கட்சிக்கு வெறும் 82 இடங்கள்தான் கிடைக்கும். அவ்வளவுக்கு மஹிந்தரின் ஆதரவு வீழ்ந்துவிட்டது என்ற தகவல் அவருக்கு புள்ளி விவரக் கணக்கோடு தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் அவர் அதிர்ந்து போயிருக்கிக்கிறார் என்கின்றன உள்வீட்டுச் செய்திகள்.

இனி என்ன? 'செட்டி நட்டம் ஊர்மேலே!' என்பது போல, ஜனாதிபதி மஹிந்தரின் செல்வாக்குச் சரிவை - ஆதரவு வீழ்ச்சியை - சரிசெய்வதற்கான அழுத்தம் தமிழர் தேசம் மீது கட்டவிழும். அவரது செல்வாக்கை தென்னிலங்கைச் சிங்களத்தில் வளர்ப்பதற்கான பலிக்கடாவாகத் தமிழர் தேசம் ஆக்கப்படும்.

பௌத்த - சிங்களத் தீவிரப் போக்குப் பேரினவாதிகளை தமது செயற்பாடுகள் மூலம் மகிழ்ச்சிப்படுத்தி, அவர்களைத் திருப்திப்படுத்தி, அதன் வாயிலாக அவர்களது ஆதரவை வளைத்துப் போட்டு, தனது செல்வாக்கு நிலையை ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்துவதற்காக மஹிந்தரின் அரசு வழமைபோல தமிழர் விரோத - தமிழர் குரோத - செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தும் என்பதில் சந்தேகமுற வேண்டியதில்லை.

அதனால் அமைதி முயற்சிகளுக்கான எஞ்சிய - மிச்சசொச்ச - வாய்ப்புகளும் அடியோடு அடிபட்டுப் போகும். சமாதானத் தீர்வு கானல் நீராகும்.

இவை எதிர்பார்க்கப்படுபவைதான்.

தெற்கில் மஹிந்தரின் செல்வாக்கு சரிந்தால், அதைச் சரிப்படுத்துவதற்கான போரியல் அழுத்தம் தமிழர் தேசம் மீதே கட்டவிழும் என்பது நமது அனுபவப் பாடம்தானே......!

## குடாநாட்டுக்கு அனுப்பிய பொருள்களுக்குரிய பணத்தைத் தருமாறு அரசு அவசரப்படுத்துகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.23

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்ட பொருள்களுக்குரிய பணத்தை விரைவாக செலுத்த வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் ப.நோ.கூ.சங்கங்களைக் கேட்டுள்ளார்.

உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இயங்குகின்ற ப.நோ.கூ.சங்கங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அனுப்பப்பட்ட பொருள்களுக்கான கொடுப்பனவை இன்னும் முழுமையாகச் செலுத்தவில்லை. கொடுப்பனவுகளை செலுத்தினால் மட்டுமே எதிர்காலத்தில் பொருள்களை, கொள்வனவு செய்யமுடியும் என்று அரச அதிபர் சங்க முகாமையாளர்களுக்கு விளக்கினார்.

இதேவேளை பின்வரும் விடயங்கள் செயலகத்தில் நடந்த கூட்டத்தின் போது அலசி ஆராயப்பட்டன.

* ப.நோ.கூ.சங்கம் தனியாரிடம் பொருள்களைக் கொள்வனவு செய்வதை தவிர்த்தல்.
* அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணத்தை வேறு தேவைகளுக்காக ப.நோ.கூ.சங்கம் பயன்படுத்தக்கூடாது.
* செயலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையை விட கூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்யக்கூடாது.
* ப.நோ.கூ.சங்கங்கள் தேவைக்கு அதிகமான அளவு பொருள்களை இருப்பில் வைத்திருத்தல் ஆகாது.
* பேக்கரிகளுக்கு ப.நோ.கூ.சங்கங்கள் சில்லறை விலைக்கு மா விற்பனை செய்யக்கூடாது.
* கொள்வனவு செய்யப்படும் பொருள்களை, நட்டம் ஏற்படாத வகையில் குறைந்த இலாபத்துக்காவது விற்பனை செய்வதே நல்லது.

இதேவேளை -

குடாநாட்டிற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட பொருள்களுக்கான பணத்தை விரைவாக அனுப்பிவைக்கும்படி ஜனாதிபதி செயலகமும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகமும் அரச அதிபரிடம் வலியுறுத்தி இருப்பதாக அரச அதிபர் தகவல் தெரிவித்தார். (அ-4)

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்குச் சம்பளம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள மற்றும் பெறாத வவுனியா வடக்கு, தெற்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாதச் சம்பளம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். கல்வி வலயத்தில் வழங்கப்படும் என்று வலயக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

ஏனைய வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பள விவரப் பட்டியல் கிடைக்கப்பெற்றதும் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-4)

## மாணவர்களுக்கு இன்று பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த, பிற மாவட்டப் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பயண ஏற்பாடுகள் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும்.

இத் தகவலை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

பதிவு செய்த சகல மாணவர்களையும் பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 7 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்துக்கு சமூகம் தருமாறு அவர் கேட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி பயணம் செய்வதற்கென செயலகத்தில் பதிவு செய்து அனுமதிச் சீட்டு பெற்று பயணம் செய்யாதவர்களும் இன்று காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். புகையிரத நிலையத்திற்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (202)

## சமய சந்நிதிகளில்

அரியாலை புனித யூதாததேயு ஆலய பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

29ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

* * *

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * *

நீர்வேலி கந்தசாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (203-28)

**நாளை**
சித்திரை - 11
செவ்வாய்க்கிழமை
24.04.2007
திதி: அட்டமி
பின்னிரவு : 5.39
நட்சத்திரம்: பூசம்
பின்னிரவு: 05.56
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]

## புறக்கோட்டையை விட குடாநாட்டில் குறைந்த விலையில் பொருள்கள் கிட்டும்

### அதற்கு ஏற்பாடுகளைச் செய்கின்றதாம் அரசு

கொழும்பு, ஏப். 23

கொழும்பு புறக்கோட்டை சந்தை விலைகளைவிட குறைந்த விலைகளில் யாழ். குடா நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் முதற்கட்டமாக 97 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய இரண்டு கப்பல்கள் இன்னும் சில தினங்களுக்குள் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படும்.''

- இவ்வாறு தேசியபாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச் சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டைத் தமிழர்கள் அவர்களின் பாரம்பரியத்துக்கு உட்பட்ட விதத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்கள். தற்போது யாழ். குடாநாட்டில் பெருமளவு பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அங்கு நிலவும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டைக் குறைக்கவும் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு புறக்கோட்டைச் சந்தையில் நிலவும் விலைகளைவிட முடியுமானவரை குறைந்தவிலையில் பொருள்களைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென 10 தனியார் கப்பல் சேவைகள் முன்வந்துள்ளன. ஆகவே அவற்றையும் நாம் சேவையில் இணைத்துக்கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

### இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ந்துள்ளன. அவை வவுனியாவுக்கு வடக்குப் புறமாக நிலை எடுத்துள்ளன.

வன்னிக்குச் செல்லும் நுழைவாயிலாக விளங்கும் ஓமந்தை சோதனைச் சாவடிப் பக்கத்திலிருந்து முன்னேறும் என்ற கணிப்புடன் விடுதலைப் புலிகள் தமது நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அங்கு இடம்பெற்ற சில தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் எதிர் நடவடிக்கைகளை அதிகரிக்க ஏதுவாகி இருந்தன. - இவ்வாறு இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார். (அ)

### தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினால் மாத்திரமே அங்கு சென்று கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் இல்லையேல் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையை விளக்கி நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு நேற்றுக் காலை 'தொலைநகல்' மூலம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அதற்கான பதிலை அவர்கள் அரசிடமிருந்து எதிர்பார்த்திருகின்றனர்.

மட்டக்களப்பு படுவான் கரையில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த சமயம் அவர்களைப் பார்க்கச் செல்வதற்காக இதே போன்றொரு கோரிக்கையை இவர்கள் நால் வரும் அரசிடம் முன்வைத்தனர் என்றும் அக் கோரிக்கையை அரசு அப்போது நிராகரித்துவிட்டது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ப. அரியநேத்திரன் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அமீர் அலி, மட்டக்களப்பு அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### அருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை காரணமாக பயங்கரவாதிகள் பாரிய பின்னடைவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், சிங்களவர்கள் சிலர் பணத்துக்காக புலிகளிடம் நாட்டைக் காட்டிக்கொடுப்பது தேசத்துரோக செயலாகும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

### தரைமீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கப்பல் தனியாருக்குச் சொந்தமான சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு அருகில் தரித்து நின்றது.

- தாக்குதல் வெற்றிபெற்றிருந்தால் அதனால் எத்தகைய விளைவுகள் ஏற்பட்டி ருக்கும் என்பதை கணிக்க முடியாது. இதுவும் விடுதலைப் புலிகளால் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து ஏற்பட்ட அரசியல், இராணுவ, பொருளாதாரச் சேதங்களைப் போன்று இருந்திருக்கும்.

* விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் திறன் தற்போதும் முனைப்பாக உள்ளது. (அ)

### பாப்பரசரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டு வருகின்றோம்.

நாம் மக்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதும் இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான். மாறாக அரசின் மீது வெறுப்புக் கொண்டோ அல்லது புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தோ அல்ல.

முழு உலகுமே மஹிந்தவிடம் கேட்டுக்கொள்வதைத் தான் நாமும் கேட்டுக்கொள்கிறோம். ஜே.வி.பியைத் தவிர அனைவரும் யுத்தத்தை வெறுத்து அமைதிப் பேச்சையே விரும்புகின்றனர்.

இப்போது போப்பாண்டவரும் இதைத் தான் சொல்லியிருக்கிறார். சாக்குப்போக்கு எதனையும் சொல்லாமல் இனியாவது நேர்மையான முறையில் பேச்சைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

புலிகளும் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு இதய சுத்தியுடன் தமது மக்களின் நலன் கருதி பேச்சு மேசைக்கு வர வேண்டும் - எனக் கூறினார்.

## வவுனியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

வவுனியா, ஏப். 23

நேற்றுமுன்தினம் இரவு வவுனியா கரைபிஞ்ச குளத்தில் 21 வயதுடைய இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் சடலத்தை பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

## மட்டுவிலில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப்.23

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், மட்டுவில் தெற்கு உள்ளிட்ட பகுதிகள் சனிக்கிழமை காலை தொடக்கம் நண்பகல்வரை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

படையினரால் நண்பகல் பொது மக்களுக்கு தேனீரும் பணிசும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அளவெட்டி ஆலயத்தில் கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஏப்.23

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் காவல் பணியில் இருந்த காவலாளியை கட்டிவைத்த கொள்ளையர்கள், ஆலயக் கதவை உடைத்து உட்புகுந்தனர்.

மூலஸ்தானத்தில் உள்ள விக்கிரகத்தை புரட்டி உள்ளிருந்த பவுண் தகடுகள் மற்றும் சுவாமிக்கு சாத்தும் வெள்ளியிலான அங்கிகள் ஆகியவற்றை கொள்ளையர்கள் எடுத்துச் சென்றனர். (அ-1)

## மக்கள் வங்கிக்கிளைகளில் விசேட வட்டி சலுகை

மக்கள் வங்கியில் அதிக தொகைகளை வைப்பிலிடுபவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு விசேட வட்டி வீதம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியில் பத்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 18வீத வட்டியும் நூறு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 20 சதவீத வட்டியும் விசேட வட்டியாக வழங்கப்படவுள்ளது.

இந்த விசேட வட்டி சலுகை எதிர்வரும் 30ஆம் திகதிவரை மட்டும் வழங்கப்படும் என்று மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை செல்லம்மா

சாவகச்சேரி, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை செல்லம்மா நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் யோகம்மா, காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பராசக்தி, அன்னலட்சுமி, புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் குணவதி, யோகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் இராசரத்தினம், கமலாவதி, ஐயாத்துரை, குமாரசாமி, சுப்பிரமணியம், புஸ்பராணி, சுந்தரலிங்கம், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மாண்டான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.யோகலிங்கம்(வவா).

பருத்தித்துறை வீதி,
கெருடாவில்,சாவகச்சேரி. [சி-50067]

## திருமதி சத்தியபாமா இரத்தினசபாபதி

(டெய்சி அக்கா)



திருமதி சத்தியபாமா இரத்தினசபாபதி (டெய்சி அக்கா) ஆஸ்திரேலியா, சிட்னியில் கடந்த சனிக்கிழமை திடீர் மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் (ஹென்றி - கிங்ஸ்ரன் ஹோட்டல், ஒன்ராறியோ) அன்பு மனைவியும் இளங்கோவன், இளஞ்சேயன், அனுஷியா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் திருமதி சின்னத்துரையின் அன்பு மகளும் திருமதி சறோஜினி (ரூபி) குமாரசாமி, ஜெயபதி, திருமதி சற்குணதேவி(மோ்லி) செல்வரத்தினம், திருமதி சகுந்தலா (பேர்ஸி) சுந்தரமூர்த்தி (மெல்பேர்ன்), திருமதி சந்திரலீலா நாகராசா, திருமதி சாந்தினி(கிறேசி) தேவமனோகரன், டாக்டர் திருமதி சுசிலா(குளோரி) சிறீரவீந்திரராஜா, திருமதி சுலோசனா கணேஷ்குமாரு ஆகியோரின் அருமைச் சகோதரியும் அனுஜன், மீனலோஜினி ஆகியோரின் மாமியும் மைலன், சாந்தலா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே.பாஸ்கரன்.

ஹோலண்ட்ஸ் அவனியூ,
ஹாச் என்ட், லண்டன்.

## அப்புக்குட்டி யோகராசா



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி யோகராசா 19.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னுத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் பிரதீபன் (வவா - டோகா), நிலாயினி, முகுந்தினி, தபோதினி, சஜிந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நடராசா மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரனும் தியாகராசா, பரமேஸ்வரி, சீவரத்தினம் (இத்தாலி), நாகேஸ்வரி, முத்துராசா, கருணாநிதி (ஜேர்மனி), ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் ஒரு மணியளவில் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நவாலி வடக்கு. [59833]

## சின்னப்பா தெய்வானை (பளை)



பளையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமான சின்னப்பா தெய்வானை 21.04.2007 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா (முல்லையடி-சின்னத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் குணரத்தினம் (இளைப்பாறிய உப தபாலதிபர் - கனகராயன்குளம்), மலர் (இளைப்பாறிய பிரதம லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை) ஆகியோரின் அன்புத் தாயும் கமலாம்பிகை (முன்னாள் உப தபாலதிபர், விடத்தற்பளை), மகாலிங்கம் (முன்னாள் சிறாப்பர், சுங்கத் திணைக்களம் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.குணரத்தினம் (மகன்),
கு.குணரூபன் (பேரன்).

தற்காலிக முகவரி:
சுழிபுரம் மேற்கு,சுழிபுரம். [59855]


இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

Company Secretarial Services(Pvt.)Ltd.
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

இன்று ஆரம்பம் இரு இடங்களில்
விக்னா கல்வி நிறுவனம்

தலைமையகம்:
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: 417, கே.கே.எஸ். வீதி,
யாழ். இந்துக் கல்லூரி அருகில்.

O/L DAY CLASS 8.30 -2.30 மணி வரை

★ பிரிவு 3 இற்கான அனுமதி வழங்கப்படுகின்றன.
★ பிரிவு 4 இற்கு மிக விரைவில்
★ இம்முறை பிரிவு 6 மட்டுமே [59848]


# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் மதிப்புக்குரிய கலாநிதி நித்தியலக்ஷ்மி

தர்மசீலனின் பாசமிகு தாய்

## திருமதி திலகவதி சண்முகம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவத்துறை
பழைய மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(59853)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா சிவக்கொழுந்து

பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவக்கொழுந்து நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் தணிகாசலம், பூலோகசிங்கம், காலஞ்சென்ற நவரட்ணசிங்கம், விக்கினராஜா ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற யோகநாதன்,சுலோசனாதேவி(கனடா), மகேஸ்வரன் (லண்டன்), சரோஜினிதேவி(கரவெட்டி), ரஞ்சினி(கனடா), ராஜினி (கனடா) ஆகியோரின் தாயும் சிவமலர், பாலசுப்பிரமணியம், மனோ, தர்மலிங்கம், இளங்கோவன், குகதாசன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று பி.ப. 2 மணிக்கு சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
தர்மலிங்கம்
(மருமகன் - உதவிப் பணிப்பாளர் கடற்றொழில் திணைக்களம்).

தொ.பே.:
226 4449

## கணபதிப்பிள்ளை தம்பிஐயா

(பொன்னுத்துரை)



ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பிஐயா 21.04.2007 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.பிரபாகரன் (மருமகன்).

## இராமலிங்கம் இராசசுந்தரம்



(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், முன்னாள் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இராசசுந்தரம் நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முரளிதரன்(மகன்)
(2ஆம் அணி ...)

34, குளப்பிட்டி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயலட்சுமி பவளத்துரை



இல.635, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, மஞ்சத்தொடுவாய், மட்டக்களப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி பவளத்துரை நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் காசியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் மங்கையர்க்கரசி தம் பதியரின் அன்பு மருமகளும் இராசதுரை பவளத்துரை யின் (ஓய்வுபெற்ற கட்டட பரிசோதகர், கட்டடத் திணைக்களம், மட்டக்களப்பு) அன்பு மனைவியும் அபிராமி, மதியழகன் (World visison, மட்டக்களப்பு), துவாரகன்( 3ஆம் வருட விவசாயபீடம், பல்கலைக்கழகம், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயும் கோபிநாத்தின் மாமியும் திவ்வியாவின் பேர்த்தியும் தயானந்தன், நித்தியானந்தன்(லண்டன்), சிவானந்தன், காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் விவேகானந்தன், விபுலானந்தன் (பிரான்ஸ்), விமலானந்தன்(பிரான்ஸ்), சறோஜா(கொழும்பு), மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கத்துரை, அருமைத்துரை, கைலாசதுரை (கனடா), பவளராணி(மலேசியா), தங்கராணி, இராசராணி (பிரான்ஸ்),தேவராணி ஆகியோரின் மைத்துனியும் மிதுவுஜியின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.04.2007)திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் மட்டக்களப்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயானந்தன், விவேகானந்தன்,
(சகோதரர்கள்),
இராஜசூரியர்(மைத்துனர்).

இல.635, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0654900226 [59849]

## அந்திரேஸ்பிள்ளை பாலதாசன்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்திரேஸ்பிள்ளை பாலதாசன் நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வினிபிறீடாவின் (வதனி - ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அன்புக் கணவரும் கேபேட் றுமேஸ், கியூ பேர்ட்டினேஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்), றொபேட் றங்கேஸ், நோபேட் நரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தை யும் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற அந்திரேஸ்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் தாஸீஸம்மா, எலிசபேத், பத்மதாசன்(மீன்பிடித் திணைக்களம், யாழ்ப்பாணம்), Rev. சகாயதாசன் (ஆஸ்திரேலியா),தேவதாசன்(கெனடி), வசந்தி (கனடா), அக்னெஸ், ஜெயந்தி, தேவநேசம், கார்மலா(சாந்தி), அமலதாஸ் (குமார்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கோப்பாய் மத்தி பிரான்சிஸ்பிள்ளை லில்லிமேரி தம்பதியரின் மருமகனும் றெஜினோல்ட் (சம்பந்தன் கிளினிக்), பிறிம்றோஸ் (லண்டன்), ராகினி, சில்வேஸ்ரர் (A.B.Mauri), வினோதினி, வோசிங்ரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.04.2007) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் சென்.மேரிஸ் தேவாலயத் தில் (RC) நடைபெற்று, பூதவுடல் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வினிபிறீடா (மனைவி),
சில்வேஸ்ரர்(மைத்துனர்).

நாவலர் பாடசாலை வீதி,
கோப்பாய் மத்தி,கோப்பாய்.

## சதாசிவம் சந்திரசேகரம்

(Rtd. P.W.D. Overseer)



மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் அராலி, செட்டியார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சந்திரசேகரம் நேற்று (22.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்லையா தம்பதியரின் மருமகனும் மனோரஞ்சிதத்தின் கணவரும் சச்சிதானந்தன், சுகுனாதேவி ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் குகராஜன்(SLRC), தேவராஜன்(Baharin), யோகராஜன்(U.K.), கோமதி(U.K.), சாந்திமதி(Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உஷா, சுமித்ரா(Baharin),சாந்தி(U.K.) பிறேம்(U.K.) லக்ஸ்மன்(Australia) ஆகியோரின் மாமனாரும் மீரா, துளசி, கண்ணன், Baharin ஐ சேர்ந்த துவாரகா,மனோரஞ்சன், மயூரன், செந்தூரன், லண்டனைச் சேர்ந்த சிந்து, மதுரா, நிக்கலா, அஞ்சலா ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சர்மிளா, ரமேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2007) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் இல. 477, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குகராஜன்-
(மகன் - கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)

477, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2490 [சி-50063]

## சின்னக்குட்டியர் செல்லத்துரை

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கோயில் குடியிருப்பு சாவகச்சேரியைப் புகுந்தஇடமாகவும் பிரான்ஸைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டியர் செல்லத்துரை 18.04.2007 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டியர் - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துவேலு-பார்வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவராசா, நாகபூசனி, முகுந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமி, வைரவநாதன், செல்வராணி, காலஞ்சென்ற பத்மராஜன் ஆகியோரின் அன்பு மாமனும் துஸ்யந்தன், தாரணி, தக்சன்,புஷே, துஷான், கிறிஸ்ரஸ், சந்திரகுமார், வியாஸ், விசாலி, விஜு ஆகியோரின் பாசமிகு பேரனும் இராமலிங்கம், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், சிவகுரு ஆகியோரின் சகோதரனும் சிவசோதி, காலஞ்சென்றவர்களான தியாகராசா, முத்துக்குமாரசாமி, இலட்சுமி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.04.2007)செவ்வாய்க்கிழமை பாரிசில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாரிஸ் தோ்லற்றஸ் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.முருகதாஸ்(பெறாமகன்.),
க.சிவசோதி(மைத்துனி).

4 ஆம் ஒழுங்கை,கச்சாய் வீதி,
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org